

யாழ்ப்பாணம் கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட
வீரவாகு தேவர் மரபினரும் செங்குந்த குலத்தவருமாகிய

அமரர்

# திருமதி.சிதம்பரப்பிள்ளை இலட்சுமி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த ஞாபகார்த்த

# நினைவுச் சுடர்

13.10.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



யாழ்ப்பாணம் வடமராட்சி கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட
வீரவாகு தேவர் மரபினரும் செங்குந்த குலத்தவருமாகிய

அமரர்

# திருமதி.சிதம்பரப்பிள்ளை இலட்சுமி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த ஞாபகார்த்த

# நினைவுச் சுடர்

13.10.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

குடும்பத்தின் நல் ஒளிவிளக்காய்

நானிலம் போற்றும் மனைவியாய்

பொறுமையின் நற்சிகரமாய்

ஊர் போற்றும் உத்தமியாய்

பெண் குலப் பெருமைதனைப்

பேணிப் பணிபல புரிந்து

பதின்மரை தல விருட்சமாக்கியே

கண்கண்ட தெய்வமாகப் பாரினில்

நம்மை வளர்த் தெடுத்த உத்தமியாள்

அன்புத்தாயவள் பாதக் கமலத்திற்கு

இந் நினைவுச் சுடரைக்

காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி..... சாந்தி.... சாந்தி

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்"

கீழ்க்கரவை மண்ணில்

1933 . 03 . 15



யார்க்கரு விநாயகர் பாதத்தில்

2019 . 09 . 28

அமரர்

# திருமதி. சிதம்பரப்பிள்ளை இலட்சுமி

அவர்களின்

## திதி வெண்பா

சீர்மிகு விளம்பியிலே புரட்டாதித் திங்களதில்
பார் தரும் அமாவாசைத் திதி நன்னாளில்
கார் எழில் இலட்சுமி அம்மா - மாண்புடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

## பிள்ளையார் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்றடி வாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே.

## திருவாசகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறிவித்துச் சிவம் ஆக்கி எனை ஆண்ட
அத்தன் எனக்கு அருளிய ஆறு ஆர் பெறுவார் அச்சோவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளி வாளர் விளக்கே யுலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளி வளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
வன்னநடை மடவாளுமை கோனடியோ
முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போதுன்
அடியின் கீழ் இருக்க வென்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இசைந்த ஏறுங்கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியதளாடையும் மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணிமாலையும் முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் வேரறமுனைவோனே
உகந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசைந்த போதென் துயர் கெடமாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.

## திருவருட்பா

ஒருமையுடன் நினதுதிருமலரடி நினைக்கின்ற
உத்தமர் தன் உறவு வேண்டும்
உள்ஒன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறு நினது புகழ் பேச வேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானநோய்
பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண் ஆசையை மறக்கவேண்டும் உனை
மறவாதிருக்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிவேண்டும் நின் கருணை நிதிவேண்டும்
நோயற்ற வாழ்வு நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஓங்கும் கந்த வேளே
தண்முகத்துய்ய மணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

கல்லாப்பிழையும் கருதாப்பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப்பிழையும் நின்னைந்தெழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்த ருள்வாய் கச்சி யேகம்பனே

பத்தும் சுமந்து பிறந்து வளர்ந்து பட்டாடை சுற்றி
முத்தும் பவளமும் பூண்டு ஓடியாடி முடிந்த பின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தருகே இனி சாகும் பிணங்கள்
கத்தும் கணக்கென்ன காண் கயிலாபுரி காளத்தியே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபடு தெய்வங்களை வேண்டித் துதித்தல்

## யாழ்ப்பாணம் கரவெட்டி கிழக்கு கரவெட்டி ஸ்ரீ யார்க்கரு விநாயகர் துதி

யார்க்கும் அருள் சுரக்கும் யார்க்கருவில் ஐங்கரனே
பார்க்கு மிடமெங்கும் நிறைந்துள்ள பரம்பொருளே
ஆர்க்கும் காதலினால் அருட்பணிகள் செய்துவந்த
பேர் புகழாள் இலட்சுமியாள் பெருமைபெற நின்தாளில்
சேவை தனைச் செய்யவென தேடிவந்தாள் மகிழ்வுடனே
சேவடியில் தினம் இருத்து பாமாலை பாடிடுவாள்
குஞ்ரமே ஐங்கரனே வேளமுகப் பெருமானே
அஞ்சாமல் காத்தருள்வாய் யார்க்கருவில் ஐங்கரனே.

## யாழ்ப்பாணம் கச்சாய் தெற்கு கொடிகாமம் ஸ்ரீ பிலாவடி முருகன் துதி

அசுரர் குலமழித்து
தேவர் குலம் காத்தகந்தன்
பிலாவடிக் கந்தன் என்றால்
வெல்லம் போல் இருக்குது காண்
கந்தா! கந்தா எனத் தினமும்
கசிந்துருகும் இலட்சுமியாள்
சரணடைந்தாள் திருவடியை
கருணையுடன் காத்திடப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் கரவெட்டி கிழக்கு, கரவெட்டி ஸ்ரீ கனகரா விநாயகர் துதி

பெற்றோரே தெய்வமென்னும் தத்துவத்தை உணர்த்துதற்காய
பெற்றோரைச் சுற்றிவந்து மாங்கனியைப் பெற்றவனே
இலட்சுமியாம் எம் தாயாள் பூவுலகைவிட்டு புது உலகம் தேடிவந்தாள்
பெற்றாமரைத் தாளில் புண்ணியனே இருத்திடுவாய்


## யாழ்ப்பாணம் கரவெட்டி கிழக்கு, கரவெட்டி ஸ்ரீ பத்திரகாளித்தாய் துதி

சக்தியாய் தாயாய் தயாபரியாய் விளங்கிடுவாய்
புத்தியால் புவனம் இதை புதுமைகொண்டு ஆண்டிடுவாய்
பக்தியாய் தினம் உருகி பரவும் உன்அடியவளாம்
இலட்சுமித்தாய் உன்னடியில் இரட்சிப்பாயே.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சிதம்பரப்பிள்ளை இலட்சுமி அவர்களின் வாழ்க்கை வரலாறு

இந்து சமுத்திரத்தின் முத்து என அழைக்கப்படும் ஈழமணித் திரு நாட்டின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தில் உள்ள கற்றவர் விளங்கும் வடமராட்சி கரவையம்பதியில் வீரபாகுதேவர் மரபில், செங்குந்த குலத்தில் வேலுப்பிள்ளை சின்னம்மா தம்பதிகளின் மகளாக கந்தையா பாஞ்வதியோடு உடன்பிறந்த தங்கையாக கனிஷ்ட புதல்வியாகி இலட்சுமி எனும் நாமம் தாங்கி 15.03.1933 அன்று பூமியிலே பிறப்பெடுத்தார்.

தனது ஆரம்ப கல்வியை யார்க்கரு மகா வித்தியாலயத்திலும், தொடர்ந்து யா/கட்டைவேலி மெதடிஸ் மிஷன் பாடசாலையிலும், தனது ஒன்பதாவது ஆண்டுக் கல்வியை ஆங்கில மொழியில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியிலும் பயின்று குடும்பத்தின் இயலாமை காரணமாக இடைநிறுத்தப்பட்டார்.

1951ம் ஆண்டு அன்னாரது 18வது வயதில் கந்தையா இலட்சுமியின் மூத்த புதல்வனும் சின்னத்தம்பியின் அண்ணனுமாகிய கச்சாய் சிதம்பரப்பிள்ளை என்று அழைக்கப்படும் சிதம்பரப்பிள்ளை என்பவரை மணமகனாகக் கரம்பிடித்தார்.

சிதம்பரப்பிள்ளை இலட்சுமி இருவரினதும் இல்லறத்தின் தவப் பயனாக பத்துப் பிள்ளை பெற்ற பத்தினித் தெய்வம் என்று ஊராரால் அழைக்கப்பட்டார் மூத்தமகளாக செல்வநாயகி என்பவரை 20வது வயதில் பெற்றெடுத்து தொடர்ந்து ஞானசுப்பிரமணியம், மகாலிங்கம், சிவானந்தன், தர்மலிங்கம், புஸ்பநாயகி, அமிர்தநாயகி, ஆனந்தநாயகி இராமச்சந்திரன், மோகனறாஜ் என்ற பெயர்களை வைத்து கடைசிவரை புன்னகையுடன் வாழ்ந்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகள் செல்வநாயகிக்கு ஞானசுந்தரத்தையும், ஞானசுப்பிர மணியத்துக்கு குணநாயகியையும், மகாலிங்கத்துக்கு சிவயோகம் மாவையும், சிவானந்தனுக்குச் சுமதியையும், தர்மலிங்கத்திற்கு பொன்மலரையும், புஸ்ப்பநாயகிக்கு சங்கரலிங்கத்தையும், அமிர்த நாயகிக்கு உருத்திரசிகாமணியையும் ஆனந்த நாயகிக்கு, தவரத்தினத் தையும், இராமச்சந்திரனுக்கு அனுஷாவையும், மோகனறாஜ்சிற்கு அனார்க்கலியையும் திருமணம் முடித்து வைத்தார்.

வம்சத்தின் வழித்தோன்றலாக பேரப்பிள்ளைகள் வரிசையில் அருணஜா, சிவகரன் சிவராம், கிருஷ்ஷியா, விர்த்தியா, கௌசிகா, அங்கதன், கம்ஷத்வனி, தனேஷன், காருண்யா, லஸ்ஸினி, மகிஷா, தருண்யா, தனுராம், வினுஜன், டிஷானி, ஹரிஸ், ஹரினி, முதலானோரை கண்டுகளிப்புற்றார்.

நோய்வாய்ப்பட்டிருந்த போதும் தனது தேவைகளுக்கு மற்றவர் கள் சிரமப்படக்கூடாது எனக்கருதி செயற்பட்ட பெருமைக்குரியவர் பேரோடும் புகளோடும் பெருமையாய்வாழ்ந்த அன்னை 28.09.2019 அன்று இவ் உலகைவிட்டுப் பிரிந்தாலும் அனைவரது உள்ளங்களிலும் என்றும் நினைத்திருக்கின்றார் என்பது 'உள்ளங்கை நெல்லிக்கனியே ஆகும்.

ஓம் சாந்தி, ஓம் சாந்தி ஓம்சாந்தி

## தேற்றம்

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ இம் மாநிலத்தில் – வேண்டா
அது வழியே நாம் போம் அளவும்
இட்டு உண்டு இரும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகளுடன்.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகள் புலம்பல்

## அன்புள்ள அப்பம்மா

அன்பு என்ற அரவணைப்பால் அனைவரையும் அணைத்தீர்கள்
ஆதரவாய் அன்புமொழி பேசி என்றென்றும் மகிழ்ந்தீர்கள்
இன்முகம் காட்டியே குடும்ப விளக்காய் ஒளிந்தீர்கள்
ஈசன்பாதம் நாடி 87 வயதினிலே விரைந்து மறைந்தீர்கள்
உங்களது நினைவாகி படிக்கும் இப்பாமாலை இதுவே
ஊரவர்கள் பலர்கூடி உரைக்கின்ற உம் வாழ்வின் புகழதனை
என்றென்றும் எவரும் உரைப்பார்கள்.
இலட்சுமி என்ற பெயர் ஏற்றி உமை புகழ்கிறார்களே
அப்பம்மா அந்த வார்த்தைகளும் உம்மை ஐக்கியமாய்
பழகி உம்மோடு மகிழ்ந்திட்ட பலகாலம் - யாவரும்
ஒருத்தரல்ல பலர்கூடி இங்கு வந்து உளமுருகி
ஓலமிட்டு உறவினர்கள் சூழ்ந்து நினைந்து வெம்பி அழுதார்கள்.
ஔடதம் தான் உங்களது வாழ்வின் இறுதி துணையாகியதே
ஃஅப்பம்மா இவையாவும் இறைதீர்ப்பின் இறுதி முடிவாகும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உங்களது பிரிவால் துயருறும்**
**பேரப்பிள்ளைகள்**
**கௌசிகா, அங்கதன், கம்சத்வனி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மம்மா....

அம்மம்மா அம்மம்மா!
எங்கு சென்றாய் எம்மைவிட்டு
அன்போடு அரவணைப்பாய்
அருமைக் கதைகள் சொல்லிடுவாய்

தீஞ்சுவைத்தேன் பண்டங்களை
எங்களுக்கு ஊட்டிடுவாய்
அம்மம்மா! உனை மறக்க
எங்களால் முடியவில்லை

உங்கள் ஆன்மா சாந்திபெற
ஆண்டவரை வேண்டுகிறோம்

**பேரப்பிள்ளைகள்**
**(குனேசன், காருண்யா, லஸ்ஸினி மகிஷா)**

## அன்புள்ள அப்பம்மா...

பாசமுடன் அரவணைப்பீர்
பழைய கதை தினஞ் சொல்வீர்
நீதிக் கதைகள் சொல்லி
நெறிமுறைகள் கூறிடுவீர்

ஆசையுடன் தின் பண்டம்
அத்தனையும் உவந்தளிப்பீர்
பாசமுள்ள அப்பம்மா
போனதெங்கே எம்மைவிட்டு

உன் பிரிவால் வாடுகிறோம்
உனைக் காண ஏங்குகிறோம்
உன் ஆன்மா சாந்திபெற
ஆண்டவரை வேண்டுகிறோம்.

**பேரப்பிள்ளைகள்**
**(அருண்யா, விதுகரன், சிவராம், கிருஷ்ஷியா, விர்த்தியா, கௌசிகா, அங்கதன், கம்ஸத்வனி, தருண்யா, தனுராம், லினுயன், டிசாணி, கரிஷ், கரிணி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Appachi, you've grown on me

I first remember you as the grandmother I visited on weekends, you tempted me with good stories and jokes. In my schooling years you'd always encourage me to study hard and always remembered my father's Past life through your stories.

I remember my last phone conversation with you on 27th October 2019 before you were reached the god. I studied my life through your life. I would like to express my grateful feelings through a small poem.

Grandma,
With the gift of years
Comes the treasure of Knowing that there are many who love you dearly.

The memories you've made with us will last forever.
The terderness you've shared with us will never fade

The most wonderful gift you could ever give
is the special part of you
that now lives in each of us

And the truth your love has taught us.
Can only be strengthened
by the gift of time....
For where roots grow deep,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

memories grow
forever.
I was unable to see you before
Passed on, But yal still grown on me
I love you appachi. May your soul rest in peace.

"The world changes from year to year but the love & memory of you
Shall never pass away"

**With love**
**S.Kirushshiya**

## அன்புள்ள அப்பாச்சி...

காலை எழுந்தவுடன் கடன்களை முடித்து
வீபூதி என்பீரே
அத் தெய்வீக உணர்வு பார்த்து
நாங்களும் வியந்துண்டு
அதனாலோ தெரியவில்லை
அப்பழக்கம் நம்மில் உண்டு
நீர் கற்ற உடற்பயிற்சிதனை
எமக்கும் அழகாக விளக்குவீரே
நடைப்பயிற்சி செய்த மண் ஏங்குகிறதே
உம் சுவடுகளை எதிர்பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்மோடு நாங்களும் சிலவேளை
கரம்பிடித்து நடந்ததுண்டு
அத்தனையும் கண்முன்னே தோன்றுகிறது
அழியாத நினைவுகளாய்
சீராட்டி சிரிக்க வைத்த அப்பாச்சியே
அன்பைப் பொழிந்தே அன்புக்கே ஏங்கி
அன்போடு வாழ்ந்த எங்கள் அப்பாச்சி
என்றும் உங்கள் உறவுச் சுகம் கண்டோம்
இன்று பிரிந்தீர் இனி எப்போது அதை காண்போம்
வாழ்ந்த வாழ்க்கையின் பயணங்களை
கதையாக சித்தரித்தீர்
எவ்வளவு இன்பங்கள், துன்பங்கள் உம் வாழ்வில்
அத்தனையும் நாம் அறிவோம்.
உலகில் உயர்ந்தது கல்வி என்று
அடிக்கடி சொல்லிடுவீர், தான் அடையா இலக்குகளை
நாங்கள் அடைந்திடவே அறிவுரையும் கூறிடுவீர்
உலகில் உயர்ந்தது கல்வி என்று
அடிக்கடி சொல்லிடுவீர்.
உன் குறும்புத்தனம் சொல்லிடவே, காகிதங்கள் போதாது
உங்களுடன் சேர்ந்து மகிழ்ந்திருந்த நாட்களை நினைக்கையில்
உள்ளமது முள்ளாய் உறுத்துகிறதே.
ஆண்டவனின் அருட்பாதம் அடைந்திட்டீர்
அன்பு மலர் தூவி நின்று இறைஞ்சிகின்றோம்.

**பேரப்பிள்ளைகள்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Dearest Ammamma

Ammamma, you were the most incredible Person we have known. We cannot believe that one month ago we were singing and dancing together. you favorite song "oruru pookalime", everytime you were amazed even if it was the wrong sangathi. you have always said that Lassiny is so much like you. your eyes, your personality even if you called her Lakshika (we don't Know Why)

Taught us to respect God and our parents and to study very well to make Amma and Appa proud and happy. you faced incredible hurdles, that we cannot imagine facing, to make sure that your children and grandchildren would not have to face those challenges. We know that it was not easy to raise ten children but today you can be proud because they are happy and healthy.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

We will never forget every time spent with the entire family, when you told us little secrets and foolery about them when they were young, especially about Amma. We thank you a lot for those information that we can use when Amma blackmails us (just kidding!) you shared with us the history our family, how was our "Tata" despite he died very early, you showed many old photos full emotions and happiness. With a big heart, you gave us your old sarees and we promised you to wear them but we know you will look upon us from wherever you are.

You smile, your lauah your expression will always remind us of your Positive Vibes. We hope that we will be like you when we will be older. to make everyone happy with your jokes and to do yoga exercises every morning before the sun rises.

Thank you Ammamma for teaching us how to make great "mango chutney" "Vendikka curry", Brinjal Kullumbu".

We feel grateful for spending almost two months with you and for the bond and the closeness that we had. you were always will be an inspiration for all of your children and grandchildren.

Love,
**Your ever grateful grandchildren,**
**Lassiny and Mahisha (France)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மம்மா...

உங்கள் பாட்டைக் கேட்டு மகிழ்கின்றோம்.
நாங்கள் வீட்டில் நின்ற போது ஒரு
தேவாரம் பாடுங்கள் பேத்திகள் என்று கூறுவீர்கள்

"ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறது
வாழ்வென்றால் போராடும் போர்க்களமே"
என்று பாடும் பொழுது உன் முகத்தில் அழகு தெரிகிறது

"Hello How are you?" என்று ஆங்கிலமொழியில் பேசி எங்கள் மனதை குளிரவைப்பீர்கள். சூரியன் உதிக்கும் போது உசாருடன் யோகா பயிற்சி செய்வீர்கள். நாங்கள் ஆடும்பொழுது எங்களுடன் கண் ஆட்டி, கைகளையும் ஆட்டி ஆடுவீர்கள். இந்த வயதிலே என்ன ஒரு நெகிழ்வு? ஆனால் குழந்தை போல் நாங்கள் உணவூட்ட அதை மறுத்து ஒரு பழமொழி கூறுவீர்கள். "அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு" உங்கள் கால்களை மசாஜ் செய்து உங்கள் நோய்களை விரட்டிடுவோம். உங்கள் பழைய பெட்டியில் உள்ள பழைய சேலைகளை கொடுத்து, பழைய படங்களை காட்டி, எங்களுடைய குடும்ப வரலாற்றையும் அன்போடு பரிமாறினீர்கள் அம்மம்மா, எல்லா பிள்ளைகளையும், பேரப்பிள்ளைகளையும் அன்போடு அரவணைத்து நிம்மதியாக தாத்தாவுடன் சென்று விட்டீரோ?

**உங்கள் அன்பான பேரப்பிள்ளைகள்**
**(லஸ்ஸினி, மகிஷா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர்

மூஷிக வாகன மோதக கஸ்தா
ஸ்யாமள கர்ண விளம்பித புத்ரா
வாமன ரூப மகேஸ்வர புர்ரா
விக்ன விநாயக பாத நமஸ்தே



கணபதி சரணம்

| | |
|---|---|
| கலைநிறை கணபதி | சரணம் சரணம் |
| கஜமுக குணபதி | சரணம் சரணம் |
| தலைவனின் இணையடி | சரணம் சரணம் |
| சரவண பவ குக | சரணம் சரணம் |
| சிலை மலையுடையவ | சரணம் சரணம் |
| சிவ சிவ சிவ சிவ | சரணம் சரணம் |
| உலைவெறு மொருபரை | சரணம் சரணம் |
| உமை சிவை அம்பிகை | சரணம் சரணம் |
| முடியா முதலே | சரணம் சரணம் |
| முருகா குமரா | சரணம் சரணம் |
| வடிவேல் அரசே | சரணம் சரணம் |
| மயிலூர் மணியே | சரணம் சரணம் |
| அடியார் கெளியாய் | சரணம் சரணம் |
| அரியாய் பெரியாய் | சரணம் சரணம் |
| கடியாக் கதியே | சரணம் சரணம் |
| கந்தா | சரணம் சரணம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி வழிபாடு

ஒவ்வோராண்டும் புரட்டாதி மாதம் வருகின்ற பூர்வபட்ஷ பிரதமை முதல் நவமி ஈறாக உள்ள ஒன்பது தினங்கள் நவராத்திரி தினங்களாகும். நவராத்திரி நாட்களான ஒன்பது நாட்களில் முதல் மூன்று நாட்கள் கிரியா சக்தியான அன்னை துர்க்கையையும், அடுத்த மூன்று நாட்கள் இச்சா சக்தியான திருமகளையும், இறுதி மூன்று நாட்கள் ஞானசக்தியான கலை மகளையும் வேண்டி வழிபட வேண்டும் என சாஸ்திரங்கள் சொல்கின்றன.

உலகின் முக்கிய தேவையான ஞானம், செல்வம், வீரம் இவை மூன்றும் பெற்றுச் சிறந்திட முப்பெரும் தேவியரையும் மும்மூன்று நாட்கள் முறைப்படுத்தி, வேண்டி வழிபட்டாலும் மூன்று சக்தியரும் ஒன்றான ஆதிசக்தியே எனக் கருதி சக்தியின் ஒன்பது ரூபங்களையும் ஒன்பது நாட்களிலும் வழிபடுவது இன்னும் சிறப்பாகும்.

நவராத்திரியின் சிறப்பம்சமாக பெண் குழந்தைகளில் பத்து வயதிற் குட்பட்ட ஒன்பது குழந்தைகளை தேர்ந்தெடுத்து அவர்களில் நாளொன்றுக்கு ஒருவராக நீராட்டி, புத்தாடை அணிவித்து அவர்களை தேவியாக நினைத்து வணங்க வேண்டும். இதுபோல் ஒன்பது நாட்களும் அன்னைக்குகந்த பிரசாதங்களை, சித்திரான்னங்களைப் படைத்து வழிபடுவதும் சிறப்பாகும். ஒவ்வொரு நாளும் மாலை நேரத்தில் வீட்டில் வைத்திருக்கும் கொலு முன்பாக, திருவிளக்கேற்றி அம்மன் படம் வைத்து அன்னையின் திருமுன் அமர்ந்து பக்திப் பாடல்கள் பாடி முறைப்படி வழிபட வேண்டும்.

முதல் நாள் அம்பிகையை குமாரி வடிவமாக அலங்கரித்து மல்லிகை மலர்ச்சூடி வெண்பொங்கல் படைத்து வழிபட வேண்டும். இரண்டாம் நாளில் இராஜராஜேஸ்வரியாக அம்மனை வழிபட வேண்டும். மல்லிகை, துளசி சாற்றி, புளியோதரை படைத்து அம்மனை வழிபடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் நாள் அம்பிகையை கல்யாணியாக வழிபட வேண்டும். சம்பங்கி, மரிக்கொழுந்து போன்றவற்றால் அன்னையை அலங்கரித்து சக்கரைப் பொங்கல் நிவேதனம் செய்யலாம்.

ரோகினி தேவியாக அம்மனை வழிபடும் நாள் நான்காம் நாளாகும். ஜாதிமல்லிப் பூச்சூடி, கதம்பசாதம் படைத்து அம்மனை வழிபடலாம்.

ஐந்தாம் நாளன்று காளிகா தேவியாய்ப் பாவித்து அம்மனுக்கு பாரிஜாத மலர் சூடி தயிர்சாதம் படைத்து வழிபட வேண்டும்.

ஆறாம் நாளில் சண்டிகா தேவியாய் தேவியை வழிபட வேண்டும். இந்நாளில் செம்பருத்திப் பூவோடு தேங்காய்ச் சாதம் படைத்து அம்மன் அருள் பெறலாம்.

ஏழாம் நாளில் தேவிக்கு தாழம்பூ மாலை போட்டு, எலுமிச்சை சாதம் நிவேதனம் செய்து அன்னபூரணியாய் வழிபடுதல் வேண்டும்.

எட்டாம் நாள் அஷ்டதேவிகளுடன் எழுந்தருளும் துர்க்கையாய் அம்மனைப் போற்ற வேண்டும் ரோஜாப்பூ சாற்றி, பாயாசம் படைத்து வழிபட வேண்டும்.

ஒன்பதாம் நாள் காமேசுவரி எனும் சிவசக்திக் கோலத்தில் அம்மனை சுபத்திரா தேவியாகப் பாவித்து செந்தாமரை மலரால் அர்ச்சித்து திரட்டுப்பால் நிவேதனம் செய்து பூஜிக்க வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலு வைத்தல்

கொலு வைப்பது நவராத்திரி நாட்களின் சிறப்பம்சமாகும் பஞ்சபூதங்களுள் ஒன்றான மண்ணினால் சிலை செய்து அதில் அம்மனை எழுந்தருளச்செய்து வழிபட்டால் அன்னையின் அருள் பரிபூரணமாகக் கிடைக்கும் என தேவி புராணம் கூறுகிறது. மார்க்கண்டேய புராணத்தில் மகாராஜ சுரதா என்பவன் தன் குருவின் ஆலோசனைப்படி காளி ரூபத்தை மண்ணில் செய்து வழிபட்டு அருள் பெற்றதாகக் கூறப்பட்டுள்ளது.

இதனை உணர்த்தும் விதமாகவே கொலுக்காட்சியில் அனைத்து அம்மன் பொம்மைகளையும் முறைப்படி அடுக்கி வைத்து பூஜிக்கிறோம். கொலு வைப்பவர்கள் புரட்டாசியில் வரும் அமாவாசை நாளில் கொலு வைக்கும் முன்பு வீட்டை சுத்தமாக்கி, அழகிய கோலங்கள் போட வேண்டும். பின்மேடை அமைத்து பொம்மைகளை வரிசைப்படுத்த வேண்டும். 5, 7, 9 படிகள் அமைத்து கொலு வைக்கலாம்.

முதல் படியில் புல், செடி, கொடி ஆகிய தாவர பொம்மைகளை வைக்கலாம். இரண்டாம் படியில் நத்தை போன்ற பொம்மை வைப்பது நலம் பயக்கும். நத்தை போல மெதுவாக நிதானமாகச் சென்று உயர் இடத்தைப் பிடிக்க வேண்டும் என்று உறுதி கொள்வதே இதன் பொருள்.

மூன்றாம் படியில் எறும்பு, கறையான் புற்று பொம்மைகளை வைக்க வேண்டும். எறும்பைப் போல சுறுசுறுப்பு, எத்தனை முறை தகர்த்தாலும் கறையான் திரும்பத் திரும்ப புற்றைக் கட்டுவது போன்ற திட மனப்பான்மை வேண்டி பொம்மைகளை அடுக்க வேண்டும்.

நான்காம் படியில் நண்டு, வண்டு பொம்மைகள் இடம்பெற வேண்டும். இவற்றின் குணம் ஆழமாகி ஊடுருவிப் பார்ப்பது எந்த விஷயத்தையும் ஆழமாகச் சிந்தித்து செயலாற்றுவதை இந்த பொம்மைகள் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் படியில் மிருகங்கள், பறவைகள் பொம்மைகள் வைக்க வேண்டும். மிருக குணத்தைவிட வேண்டும். பறவை போல கூடி வாழ வேண்டும் என்பதே இதன் பொருள்.

ஆறாம் படியில் மனித பொம்மைகள் வைக்க வேண்டும். வாழ்க்கையில் மேற்கண்ட ஐந்து படிகளில் உள்ளது போன்ற குணங்களைக் கடைப்பிடித்தால் மகான்கள் ஆகலாம் என்பதே இதன் பொருள்.

எட்டாம் படியில் தெய்வங்களுக்கு கீழ் ஸ்தானத்தில் இருக்கும் தேவர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், நவக்கிரகங்களின் பொம்மைகளை வைக்க வேண்டும் முனிவர் மகான் நிலையை அடையும் மனிதன் தெய்வ நிலைக்கு உயர்வதை இது காட்டுகிறது.

ஒன்பதாம் படியில் பிரம்மா, விஷ்ணு, சின் ஆகியோர் தங்கள் தேவியரான சரஸ்வதி, லட்சுமி, பார்வதியுடன் இருக்க வேண்டும். ஆதிபராசக்தி சிலையை நடுவில் பெரிய அளவில் வைக்க வேண்டும் உயிர்கள் தங்கள் நிலையை கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்தி தெய்வமாக வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்துவதோடு முதல் படியில் தாவரங்களையும் அடுத்தடுத்த படிகளில் சிற்றுயிர்கள், மனித பொம்மைகள், இறுதியில் தெய்வ பொம்மைகள் என அமையும் கொலுக் காட்சி, உயிர்களின் பரிணாம தத்துவத்தையும் உணர்த்துகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயகலைகள்!

ஆய கலைக ளறுபத்து நான்கினையு
மேய வுணர்விக்கு மென்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியாசனத்தில் அரசரோடெம்மைச்
சரியாசனம் வைத்த தாய்!

படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ் பூந்தாமரைபோல் கையும் - துடியிடையும்
அல்லும் பகலும் அனவரதமும் துதித்தால்
கல்லும் சொல்லாதோ கவி?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குமரகுருபர சுவாமிகள் அருளிய

## சகலகலாவல்லி மாலை

### உள்ளக் கமலத்தில் உறைய வேண்டுதல்

வெண்டா மரைக்கன்றி நின்பதங்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
லோசக மேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான் பித்தாக
வுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே. 1

### நாற்கவி பாட நல்லருள் தருவாய்

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைப்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே. 2

### கலைகள் அருளிற் குளிக்க விரும்புதல்

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்வியும் வாக்கும் பெருகிடச் செய்வாய்**

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தொய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே 4

**நெஞ்சத் தடத்தினில் நிலவ வேண்டும்**

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே. 5

**பண்ணும் பரதமும் நல்கிட வேண்டுதல்**

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழிதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனதுங்
கனலும் வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே. 6

**பாட்டும் பொருளும் பயனும் கூட்டுவாய்**

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே 7

**சொல்லின் வன்மை பெருகிட வேண்டுதல்**

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே 8

**சொற்கும் பொருட்கும் உயிராய் இருப்பவள்**

சொற்கும் பொருட்கு முயிராம்மெய்ஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாண நடை
கற்கும் பதமாம் புயத்தாளே
சகல கலாவல்லியே. 9

**மன்னர் தன்னையும் பணியச் செய்வாய்**

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரு மென்
பண்கண்ட ளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும்
விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்

கட்டியணைந்திடும் பெண்டீரும் மக்களும் காலத்தச்சன்
வெட்டிமுறிக்கும் மரம்போற் வீழ்த்திவிட்டால்
கொட்டிமுழக்கி யழுவார் மயானங் குறுகியப்பால்
எட்டியடிவைப்ப ரோவிறை வாகச்சி யேகம்பனே.

பிறக்கும்பொழுது கொண்டுவந்த தில்லைப் பிறந்துமண்மேல்
இறக்கும்பொழுது கொண்டுபோவ தில்லை யிடைநடுவில்
குறிக்குமிச் செல்வஞ் சிவன்தந்ததென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக் கென்சொல்லு வேன் கச்சியேகம்பனே.

ஊருஞ்சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப் பெற்ற
பேருஞ்சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளும்
சீருஞ்சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே.
யாருஞ்சதமல்ல நின்தாள் சதங்கச்சி யேகம்பனே.

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவில்ஒரு
பிடிசாம்பராய் வெந்துமண் ணாவதுங்கண்டு பின்னமிந்தப்
படிசார்ந்த வாழ்வைநினைப்பதல் லால்பொன்னின் அம்பலவர்
அடிசார்ந்து நாம்உய்ய வேண்டுமென் றேயறிவாரில்லையே.

ஊட்டுவிப்பாலு முயங்குவிப்பானுமிங் கொன்றொடொன்ற
முட்டுவிப்பானு முயங்குவிப்பானுமிங் கொன்றொடென்ற
காட்டுவிப்பானு மிருவினைப் பாசக் கயிற்றின்வழி
ஆட்டுவிப்பானு மொருவனுண் டேதில்லை யம்பலத்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவாதிருக்க வரந்தர வேண்டும் பிறந்து விட்டால்
இறவாதிருக்க மருந்துண்டு காணிது வெப்படியோ
அறமார் புகழ்ந்தில்லை யம்பலவாண ரடிக்கமலம்
மறவாதிரு மனமே யதுகாண்தன் மருந்துனக்கே.

ஐயிரண்டுதிங்களாய் அங்கமெல்லாம் நொந்துபெற்றுப்
பையல்என்ற போதே பரிந்துஎடுத்துச் - செய்யஇரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலைதந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி.

முந்தித்தவம்கிடந்து முந்நூறுநாள் சுமந்தே
அந்திபகலாச்சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச்சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டுவேன்.

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலும் வைத்துஎன்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டுவேன்.

அள்ளி இடுவது அரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பானோ கூசாமல் - மெள்ள
முகுமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே என அழைத்தவாய்க்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேறு**

காயமே இது பொய்யடா - சிவ
காற்றடைத்த பையடா
மாயனார் குயவன் செய்த
மண்ணு பாண்ட ஓடடா காயமே

உப்புமண்ணும் ஓட்டை மூங்கில்
ஒட்டிவைத்த கூடடா
உளுத்த நரம்பும் வெளுத்த தோலும்
இழுத்துக் கட்டிய கூடடா காயமே

குப்பைக் கீரை முளைத்தது போல்
கூடுகட்டின காடடா
கொழுத்த நரம்பும் பழுத்த தோலும்
இழுத்துக் கட்டிய கூடடா காயமே

மனமே இந்தக் காயமீதில்
ஒன்பது கோட்டை வாசலடா
வெந்த சோறும் நொந்த காய்கள்
போட்டடைத்த பையடா காயமே

புனல்ஊறும் கேணியடா
பொய் நிறைந்த வீடடா
காலையில் குளியாவிட்டால்
நாற்றம் வீசும் ஓடடா காயமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சு பஞ்ச பூதமேயிதில்
அல்லும் பகலும் வாசமே
ஆறுகரடி துஷ்ட புலிகள்
போரு செய்திடும் வாசமே                                காயமே

பந்துபோல் குதித்திடுமிவர்
பாசமேயிவர் நாசமே
எங்கள் குரு பாதம் போற்று
எடுத்துரைத்த காயமே                                காயமே

அத்திமரத்தின் கனியைப் போல
ஆடுமே ஒரு ஸ்தூலமே
தட்சணத்தில் வேடரால்
தண்டெடுப்பது முன்னமே                                காயமே

தஞ்சை நகரில் வாழுகின்ற
தவநிலையைப் பாருமே
தம்பி முனிசாமி சொல்லை
தடையில்லாமல் கேளுமே                                காயமே

**"நல்லாரைக்காண்பதுவும் நன்றே நலன்மிக்க**
**நல்லார் சொற்கேட்பதுவும் நன்றே**
**நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே**
**அவரோடு இணங்கி இருப்பதுவும் நன்றே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடம் தூபம் நல்தீபம் வைமின்
சத்தியும் சோமி யும்பார் மகளும்
நாமக ளோடு பல் லாண்டி சைமின்
சித்தியுங் கௌரி யும்பார்ப் பதியுங்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தனை யாறனம் மானைப் பாடி
ஆடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே 1

பூவியல் வார்சடை எம்பி ராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடு மின்கள்
கூவுமின் தொண்டர் புறம் நிலாமே
குனிமின் தொழுமினெங் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும் வந்தெம்மை யாளச்
செம் பொன் செய் சுண்ணம் இடித்தும் நாமே 2

சுந்தர நீறணிந்தும் மெழுகித்
தூய பொன் சிந்தி நிதிப ரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடி யெடுமின்
அந்தரர் கோன் அயன் தன் பெருமான்
ஆழியான் நாதன் நல் வேலன் தாதை
எந்தரம் ஆளுமை யான் கொழுநற்
கேய்ந்த பொற் சுண்ணம் இடித்தும் நாமே 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள் உலக்கை யெல்லாங்

காம்பணி மின்கள் கறையுரலை

நேச முடைய அடியவர்கள்

நின்று நிலாவுக என்று வாழ்த்தித்

தேசமெல் லாம்புகழ்ந் தாடும் கச்சித்

திருவேகம் பன் செம் பொற் கோயில் பாடிப்

பாச வினையப் பறித்து நின்று

பாடிப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே 4

அறு கெடுப் பாரய னுமரியும்

அன்றி மற்றிந்திர னோடமரர்

நறு முறு தேவர் கணங்க ளெல்லாம்

நம்பிற் பின் பல் தெடுக்க வொட்டோம்

செறிவுடை மும்மதில் எய்த வில்லி

திருவேகம் பன் செம்பொற் கோயில் பாடி

முறுவற் செவ் வாயினீர் முக் ணப்பற்க்

காடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 5

உலக்கை பல வோச்சு வர் பெரியர்

உலகமெ லாமுரல் பேதாதென்றே

கலக் அடியவர் வந்து நின்றார்

காண உலகங்கள் போதா தென்றே

நலக்க அடி யோமை ஆண்டு கொண்டு

நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த

மலைக்கு மருகனைப் பாடிப்பாடி

மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 6

சூடகந் தோள்வரை ஆர்ப்ப ஆர்பபத்

தெண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப

நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப

நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்குக்
காடக மாமலை அன்ன கோவுக்
காடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 7

வாட்டடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவன் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்தி லங்கச்
சோத் தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட் கொண்ட நாண் மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 8

வையகம் எல்லாம் உரல தாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்து றையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம் பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாண னுக்கே
ஆடற் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 9

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடச்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடு நகை வாள் நிலவு வெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்து டிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
பணி கொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம் பெருமானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்
காடற் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 11

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணினைப்பொற்றொ டித்தோள்
பையர வல்குல் மடந்த நல்லீர்
பாடிப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடக்கேள்வன் மகன் தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. 13

சங்கம் அரற்றச் சிலம் பொலிப்பத்
தாழ் குழல் சூழ்தரு மலை யாடச்
செய்கனி வாயித தழுந்து டிப்பச்
சேயிழை யீர் சிவ லோகம் பாடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கை இரைப்ப அராவி ரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்க ழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நத்தாத்
தேனைப் பழச்சுவை ஆயி னானைச்
சித்தம் புகுந்து தித் திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 15

ஆவகை நாமும் வந் தன்பர் தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள்காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல் கொடியான்
சிவபெரு மான் புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொற் செய்சுண்ணம் இடித்தும் நாமே. 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மல்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடி
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும் நாமே. 18

வட்டமலர்க் கொன்றை மாலைபாடி
மத்தமும்பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டிநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியுமாய் இரு ளாயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய் வீடும் ஆயினாருக்கு
ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 1933 – 03 – 15



இறப்பு 2019 – 09 – 28

பருத்தித்துறை சாலையில் பொறியியலாளராக கடமையாற்றும் சி.இராமசந்திரன்
அவர்களின் அன்புத் தாயார்

## அமரர் சிதம்பரப்பிள்ளை – இலட்சுமி

குலத்தின் ஒளிவிளக்கே குலமகளே
ஞாலம் போற்றிட நல்லறத்தில் வாழ்ந்தவரே
காலத்தின் கோலத்தால் காலனுனை அழைத்தானோ!
கலங்கி நிற்கின்றோம் கைகொடுப்பார் யாரென்று.

மண்ணில் மணம்பரப்ப மக்களை ஈந்துவிட்டு
கண்ணை மூடிக் காலனிடம் சென்றதேனோ?
கண்ணீர் துடைப்பவர் யார்? கவலை துடைப்பவர் யார்?
கருணையில்லாக் காலனிற்கும் நம் கதறல் கேட்கலையோ?
பாலைவனத்துப் பட்டமரம் போல
பாரில் பதறுகின்றோம் கண்ணில் நீர் மல்க.

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவிப்பதோடு
அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சாலை முகாமையாளர்,
அனைத்து உத்தியோகத்தர்களும் ஊழியர்களும்,
இ.போ.ச(வ) பருத்தித்துறைச் சாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் சிதம்பரப்பிள்ளை இலட்சுமி

அன்னாரின் மறைவை முன்னிட்டு

பிறப்பு 15 03 1933

எமது ஆழ்ந்த அனுதாபத்தையும்
கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக்
கொள்வதோடு, அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இறப்பு 28 09 2019

குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் சிதம்பரப்பிள்ளை இலட்சுமி

அன்பின் சிகரமாய் உயர்ந்தீரே!
ஆதரவின் நிழலாய் இருந்தீரே .
பாசத்தின் பிறப்பிடமாய் திகழ்ந்தீரே உமது
இனிமையான பேச்சால் அனைவரையும் கவர்ந்தீரே
உமது பிரிவாலே துயருற்று விழிநீர்
காய்ந்து மீண்டும் வருவீரோ...எனும்
ஏக்கத்தில் காத்திருக்கின்றோம்
என்றும் நீங்கா நினைவுகளுடன்

**பேரப்பிள்ளைகள்**


அன்னை மடியில் 1933.03.15

ஆண்டவன் அடியில் 2019.09.28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி...!!!



மலர்வு 15 - 03 - 1933

உதிர்வு 28 - 09 - 2019

எமது சாலைச் சாரதியான சி.மோகன்ராஜ் அவர்களின் அன்புத் தாயாரான

## அமரர் சிதம்பரப்பிள்ளை இலட்சுமி

*காற்றலையில் வந்த செய்தி கனவாகிப் போகாதோ*

*காலன் உன்னை கவர்ந்த செய்தி பொய்யாக மாறாதோ*

*நேற்றுவரை நிஜமாக இருந்தவரே இன்று*

*நிழலாகிப் போன மாயமென்ன - காலன்*

*உன் உயிரைப் பறித்ததன் மாயமென்ன*

*பிறப்பொன்று இருந்தால் இறப்பது நியதிதான்*

*ஆனாலும் உன் பிரிவைத் தாங்க முடியாது*

*உயிரே கூட அழுகுது அம்மா!*

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும் உறவுகளுடன்...

சாலை முகாமையாளர்,
உத்தியோகத்தர்கள்,
தொழிலாளர்கள்.

இ.போ.சபை (வட.),
முல்லைத்தீவுச் சாலை.

தூசா தமிழ்ப் பதிப்பகம் ... 021 205 8206. ... 077 236377



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



எமது அருமைத்தாயார் திருமதி.சிதம்பரப்பிள்ளை இலட்சுமி அவர்களின் பிரிவுத்துயர் அறிந்து வந்து சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங் களுக்கும், நீத்தார் கடன் கிரிகைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்தில் கலந்து கொண்டவர்களுக்கும், உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் அனுதாபம் தெரிவித் தவர்களுக்கும் உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரி வித்துக் கொள்கின்றோம்.

நன்றி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org